மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலாவதாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையான, கீழ்கோத்தகிரி டீ தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊட்டி தேயிலைத் தூளானது, நீலகிரி மாவட்டத்தில் விளையும் தேயிலைத் தூள் மற்றும் விலை உயர்ந்த தேயிலைத் தூளுடன் கலந்து, blend செய்து, நல்ல தரத்துடன் ஊட்டி டீ என்னும் பெயரில் அனைத்து ரேஷன் கடைகளிலும் பொதுமக்களுக்குக் குறைந்த விலையில் 2001 ஆம் ஆண்டு முதல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி Ootyblended tea–ல் அசாம் டீ, 10 முதல் 15 விழுக்காடு சேர்க்கப்பட்டு, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், சிறு தேயிலை விவசாயிகளுக்கு அதிகபட்ச விலை வழங்கும் நோக்கில், சிறு தேயிலை 50 முதல் 60 விழுக்காடு ஊட்டி டீ–யில் blend செய்து வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி தேயிலையானது, தரமான, கலப்படமற்ற, சுவையான நல்ல தரத்துடன் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது இத்தேயிலையுடன் அசாம் தேயிலையையும் கலந்து, மேலும் அதிக சுவையுடன் ரேஷன் கார்டுதாரர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இது நுகர்வோரிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. கடந்த 2018–2019 ஆம் நிதியாண்டில் 2,699 மெட்ரிக் டன் ஊட்டி டீ விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பதையும், மேலும், 2011–2012 முதல் 2018–2019 வரையிலான காலத்தில் ஊட்டி தேயிலையின் ஆண்டு சராசரி விற்பனை 3,202 மெட்ரிக் டன் இருந்தது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

58—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம்

***14612—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2019 ஜூலை 8]

பெருந்துறை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நிலம் போக்குவரத்துத் துறைக்கு நில மாற்றம் செய்யப்படவில்லை. எனவே, பெருந்துறை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *என்னை வாழ வைத்த தெய்வம் அம்மா அவர்களுடைய ஆன்மாவை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் 2007 ஆம் ஆண்டு தரமுயர்த்தப்பட்டது. கிட்டத்தட்ட 12 ஆண்டுகாலமாக அதற்கு இன்னும் சொந்தக் கட்டடம் கட்டப்படவில்லை. எங்களுடைய வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தோடு தரம் உயர்த்தப்பட்ட பல்வேறு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. ஈரோடு மாவட்டத்தில் இருக்கக்கூடிய எல்லா வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. பெருந்துறை பகுதியைப் பொறுத்தவரையிலே, ஒரு இலட்சத்து 54 ஆயிரத்து 11 வாகனங்கள் இந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குள்ளே செயல்படுகின்றன. ஆண்டுதோறும் சராசரியாக 3 கோடி ரூபாய் வருமானம் ஈட்டித் தருகிற இந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு உடனடியாக சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமென்று சொன்னால், Sanatorium *பகுதியில் இருக்கிற மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் 6 ஏக்கர் நிலத்திற்கு, அரசு மதிப்பீட்டுத் தொகையான 6 கோடி ரூபாயைக் கட்ட வேண்டுமென்று அந்தத் துறையிலிருந்து பதில் வந்திருக்கிறது.*

ஏற்கெனவே, நாங்கள் கேட்கக்கூடிய இடம் போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமான இடம். இப்பொழுது வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான இடமும் போக்குவரத்துத் துறையிலேதான் வருகிறது. ஆகவே, உங்களுடைய துறையிலே இருக்கிற ஒரு நிலத்தை, உங்களுடைய துறைக்கே கையகப்படுத்துவதற்கு 6 கோடி ரூபாய் நில மதிப்பீடு கேட்கிறீர்கள். ஏற்கெனவே நிதி நெருக்கடியில் இருக்கக்கூடிய போக்குவரத்துத் துறைக்கு அந்த 6 கோடி ரூபாயைக் கட்டுவதற்கு சிரமம் இருக்கிற காரணத்தினாலே, மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, உடனடியாக அந்த நிலத்தைக் கையகப்படுத்தி, பெருந்துறை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு உடனடியாகக் கட்டடம் கட்டித் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு தேர்வுதளத்துடன்கூடிய சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு தகுந்த அரசுப் புறம்போக்கு நிலங்கள் எதுவும் சுற்று வட்டாரப் பகுதிகளில் இல்லை என வருவாய்த் துறையினர் தெரிவித்ததன் அடிப்படையில், சாலைப் போக்குவரத்து நிறுவனத்திற்குச் சொந்தமான கருமாண்டிசெல்லிபாளையம் கிராமத்தில் 5.86 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், போக்குவரத்து ஆணையர் மேற்கண்ட நிலத்தினை போக்குவரத்துத் துறைக்கு மாற்றம் செய்வதற்கு உரிய தொகையான 5 கோடியே 97 இலட்சத்து 31 ஆயிரத்து 214 ரூபாயை ஒப்பளிப்பு செய்து தருமாறு அரசிற்கு உரிய கருத்துருவை அனுப்பியுள்ளார்கள். இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. குறிப்பிட்ட அந்த நிலம், போக்குவரத்துத் துறைக்குச் சம்பந்தப்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். போக்குவரத்துக் கழகத்திற்கும், RTO அலுவலகத்திற்கும் துறை சம்பந்தப்பட்ட நிலங்களை நில மாற்றம் செய்யும்போது சில வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

2019 ஜூலை 8]

ஏற்கெனவே மின்சாரத் துறைக்கு நில மாற்றம் செய்யும்போது, உரிய தொகையை செலுத்தித்தான் நில உரிமை மாற்றம் செய்திருக்கிறார்கள். அதனடிப்படையிலேதான் அந்தக் கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அந்த நிலத்தைக் கையகப்படுத்தி, அதிலே வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்டுவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்குள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போர்க்கால நடவடிக்கை எடுத்து, வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவது குறித்து துறையின் மானியக் கோரிக்கை விவாதத்திற்கான பதிலுரையின்போது அறிவிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.*

பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தற்போது சுகாதாரத் துறைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஒப்படைப்பு செய்யப்பட்டிருக்கிறது. அது ஒரு மிகச் சிறந்த மருத்துவமனை. போக்குவரத்துத் தொழிலாளர்களுக்காகவும் அந்தத் தொழிலாளர்களுடைய குழந்தைகளும் மருத்துவக் கல்லூரியில் பயில வேண்டும் என்கிற அடிப்படையிலும் துவங்கப்பட்ட அந்தக் கல்லூரியானது, போக்குவரத்துத் துறையினுடைய நிதி நெருக்கடியால் தற்போது சுகாதாரத் துறைக்கு மாற்றப்பட்டிருக்கின்றது. உடனடியாக அரசு அதற்கு அரசாணை வெளியிட்டு, அந்த வழியாகச் செல்லக்கூடிய அரசுப் பேருந்துகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குள்ளே வந்து செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கிருக்கின்ற நோயாளிகள் அதை கோரிக்கையாக தொடர்ந்து வைத்துக் கொண்டேயிருக்கிறார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், உடனடியாக வட்டாரப் போக்குவரத்து அலுவலருக்கு உத்தரவிட்டு, நாளையிலிருந்து அந்த வழியாகச் செல்லக்கூடிய அரசு வாகனங்கள், நோயாளிகளினுடைய நலன் கருதி, பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குள்ளே வந்து செல்ல உடனடியாக

நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே வருவாய்த் துறை அமைச்சராக இருந்தவர். இந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குத் தேவையான நிலத்தை, அவர் வருவாய்த் துறையில் இருந்தபோதே கொடுத்திருந்தால் நிச்சயமாக அதிலே புதிய கட்டடம் கட்டப்பட்டிருக்கும். ஆனால், அந்தப் பகுதியிலே நிலம் இல்லை என்பது அவருக்கும் நன்றாகத் தெரியும். போக்குவரத்துத் துறை ஒன்றாக இருந்தாலும், போக்குவரத்துக் கழகம் மற்றும் போக்குவரத்துத் துறை இரண்டும் வெவ்வேறு துறைகள் சம்பந்தப்பட்டவை. எனவே, நில மாற்றம் செய்யும்போது அதற்குரிய தொகையை செலுத்தித்தான் செய்ய வேண்டும் என்பது அரசினுடைய விதிமுறை. இருந்தபோதிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே 60 இடங்களாக இருந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பெருமுயற்சியால் 100 மாணவர்கள் பயிலக்கூடிய வகையிலே அதனுடைய எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தபோதிலும், போக்குவரத்துக் கழகங்களுடைய கடுமையான நிதி நெருக்கடியால், போக்குவரத்துத் துறையினுடைய மருத்துவக் கல்லூரி, அரசு மருத்துவமனையாக, அரசுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும், 100 மாணவர்கள் பயிலக்கூடிய அந்த seats–ல், போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுடைய குழந்தைகள் பயிலக்கூடிய உரிமையை பெற்றுக் கொண்டு, தேவையான மாணவர்கள் பயிலக்கூடிய வசதியை ஏற்படுத்தியபிறகுதான், அந்த மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மருத்துவமனைக்குள் பேருந்துகள் செல்ல

2019 ஜூலை 8]

வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இதுவரை எப்படிப் பேருந்துகள் சென்று கொண்டிருந்தன என்பது எனக்கு சரியாகத் தெரியவில்லை; Mofussil *வண்டியெல்லாம் அதன் வழியாகப் போகாது என்று நான் நினைக்கிறேன். இருந்தாலும், துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மட்டத்திலே ஆய்வு செய்து, தேவையான பேருந்துகளை அந்த வழியாக இயக்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

59—

இ–சேவை மையம்

***40556—திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி தொகுதி, பேட்டை, மானூர் மற்றும் கங்கைகொண்டான் பகுதிகளில் இ–சேவை மையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நலனே தம் நலன் என வாழ்ந்து மறைந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி தொகுதியில் 49 அரசு இ–சேவை மையங்கள் 52 முகப்புகளுடன் இயங்கி வருகின்றன. இதில், திருநெல்வேலி நகரத்தில் 5 இடங்களிலும், பேட்டையில் 2 இடங்களிலும், மானூரில் 3 இடங்களிலும், கங்கைகொண்டானில் 3 இடங்களிலும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக்